

# INTEGRITY IDOL 2018

Honouring Honesty.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

accountabilitylab

# நேர்மைத்திறன் விருது 2018

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

accountabilitylab

# நேர்மைத்திறன் விருது 2018

முதற் பதிப்பு - 2018

ட்ரான்ஸ்பேரன்ஷி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
இல: 5/1 எலிபேங்க் வீதி, கொழும்பு 5

தொலைபேசி - (94) 11 4369781
தொலைநகல் - (94) 11 2501707

tisl@tisrilanka.org
www.tisrilanka.org

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

ISBN:

புதிப்புரிமை கொண்டது. உள்ளடக்கத்தின் மறுபதிப்பிற்கு இலங்கை டிரான்ஸ்பேரன்சி இண்டர்நெஷனலின் எழுத்து மூலமான முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

# உள்ளடக்கம்

டிரான்ஸ்பேரன்சி இண்டர்நெஷனல் இலங்கை என்பது என்ன? 02
பங்காளர் நிறுவனங்கள் 02
நேர்மைத்திறன் விருது 2018 03
தகைமை 05
தெரிவடிப்படை 06
நேர்மைத்திறன் விருதுச் செயன்முறை 2018 07
நியமனங்கள் 08
நீதிபதிகள் குழாம் 08
பகிரங்க வாக்கெடுப்பு 09
விருது வழங்கல் 09
பிற்சேர்க்கைகள் 10

# 01. டிரான்ஸ்பெரன்சி இன்டெர்னஷனல் ஸ்ரீ லங்கா என்பது என்ன?

டிரான்ஸ்பெரன்சி இன்டெர்னஷனல் ஸ்ரீ லங்கா என்பது சுயாதீனமான, அரசசார்பற்ற, இலாபநோக்கற்ற நிறுவனம் என்பதுடன் நல்லாட்சியினை மேம்படுத்துவதற்கும் ஊழலை இல்லாதொழிப்பதற்கும் கடப்பாடு கொண்டுள்ள உலகளாவிய ட்ரான்ஸ்பெரன்சி.

இன்டெர்னஷனலின் ஒரு தேசிய பிரிவாகும். ஊழலின் சேதமிகு விளைவுகள் பற்றி டிரான்ஸ்பெரன்சி இன்டெர்னஷனல விழிப்புணர்வேற்படுத்தி வரும் அதேவேளை, அதனைக் கையாளுவதற்காக செயற்திறன்மிகு செயற்பாடுகளை உருவாக்கி அமுல்படுத்துவதற்காக அரசாங்கம், வியாபாரம் மற்றும் சிவில் சமூகத்திலுள்ள பங்காளர்களுடன் பணியாற்றிவருகின்றது.

# பங்காளர் நிறுவனங்கள்

## எகவுண்டபலிட்டி லெப் நிறுவனம்

எகவுண்டபலிட்டி லெப் நிறுவனம் என்பது சுயாதீனமான, இலாபநோக்கற்ற நிறுவனமாகும். இது உலகம் முழுவதும் துடிப்பான பிரஜைகளையும் பொறுப்பான தலைவர்களையும் உருவாக்க முனைகின்றது. இது சாதகமான சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கத்துடன் வகைப்பொறுப்பு முறைமைகளை வலுப்படுத்துவதற்காகப் பிரஜைகளுக்கு வழிகாட்டி, வலுவூட்டுகின்றது. பிரஜைகள சம்பந்தப்பட்ட சமுதாயங்களில் நேர்மைத்திறனினை மேம்படுத்துவதற்காக புத்தாக்கமிகு கருத்துக்களை உருவாக்கி அமுல்படுத்த இது பிரஜைகளையும˙ தலைவர்களையும் ஊக்குவிக்கின்றது.

## News1st

நியூஸ் 1st இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செல்வாக்குமிக்க செய்தி வலையமைப்பு ஆகும். விருது பெற்ற செய்தி நிறுவனம் என்பதுடன் இலங்கையின் மிகப்பெரிய மக்கள் ஊக்குவிப்பு கிராமப்புற வளர்ச்சி இயக்கமான “கம்மெத்த” நிகழ்ச்சி திட்டத்தையும் வழங்கியுள்ளது. சஹன யாத்ரா முன்முயற்சியின் ஊடாக அனர்த்தத்திற்கு ஆயத்தமாயிருத்தல் மற்றும் மட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கிறது. கம்மெத்த மற்றும் சஹன யாத்ரா ஆகிய இரண்டும் ஐ.நா.வினால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் சமீபத்தில் நியூஸ் 1st நவீன அடிமைத்துவ முறைமைக்கெதிரான ஒரு சர்வதேச முயற்சியான ‘பாலி செயற்பாட்டின் ஒரு சாம்பியன்’ அதன் மூலம் இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான போராட்டத்தில் இணைந்துள்ளது.

# 02. நேர்மைத்திறன் விருது 2018

நேர்மைத்திறன் விருது என்பது நேர்மையான அரசாங்க உத்தியோகத்தர்களைத் தேடி பிரஜைகளினால் நடத்தப்படுகின்ற உலகளாவிய பிரச்சாரமாகும். நேர்மை மற்றும் தனிப்பட்ட பொறுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்குவதற்கான நேர்மைத்திறன் எனும் எண்ணக்கருவினைப் பற்றிய கலந்துரையாடலினை இது உருவாக்க நாடுகின்றது. புதிய தலைமுறையினர் மிகவும் செயற்திறன்மிகு அரச ஊழியர்களாக ஆகுவதற்கு இது ஊக்குவிப்பை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேர்மைத்திறன் விருது 2014ஆம் ஆண்டு நேபாளத்தில ஆரம்பிக்கப்பட்டு லைபீரியா, பாகிஸ்தான், மாலி போன்ற நாடுகளிலும் மிக அண்மையில் தென்னாபிரிக்காவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் கட்டமாக தேசிய ஊடகங்கள் மூலம் நேர்மைத்திறன் பற்றிய தொடர் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரஜைகளுக்கு இந்த விருதுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இந்த நியமன காலத்தில் தொண்டர்களின் அணியொன்று நாடு முழுவதும் பயணம் செய்து நியமனங்களை உறுதிப்படுத்துவதில உதவி செய்கிறது. நியமிக்கப்படுபவர்களின் 30 பேர்களைக்கொண்ட இறுதி பட்டியல் சுயாதீனமான நீதிபதிகளின் குழாம் ஒன்றினால் இறுதி ஐந்து பேரைக்கொண்ட இறுதி பட்டியலாகச் சுருக்கப்படுகின்றது.

இறுதியான பட்டியலில் இடம்பெறுவோரின் வரலாறு அதாவது அவர்களது பின்புலம், அவர்கள் என்ன செய்துள்ளனர், அவர்கள் எதிர்கொண்ட தடைகள், அவர்களின் பணியின் தாக்கம் மற்றும் அவர்களது கனவுகள் ஆகியவை காணொளியாக்கப்பட்டு தேசிய டிஜிட்டல் ஊடகத்தில் ஒலிபரப்பப்பட்டு இணையத்தளத்திலும் சமூக ஊடகத்திலும் வெளியிடப்படும். இது இணையத்திலும் இணையம் அல்லாத தளங்களிலும் தேசிய கலந்துரையாடலினை உருவாக்குகின்றது. குறுஞ்செய்திச் சுருக்கக் குறியீடுகளின் மூலமாகவும் இணையத்தளத்தின் மூலமாகவும் பிரஜைகள் அவர்களுக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களிக்கலாம்.

நேர்மைத்திறன் விருது பொதுமக்களின் நலனுக்காகச் சேவையாற்றும் தனிநபர்களைக் கொண்டாடுகின்றது. இது நாம் பார்க்க விரும்புகின்ற மாற்றத்தினைப் பற்றிய சாதகமான சொற்பதங்களில் தேசிய கலந்துரையாடலினை வசதிப்படுத்துவதுடன் எமது சார்பிலே அரசாங்கத்திலே பணியாற்றவேண்டும் என நாம் விரும்பும் நபர்களைப் பற்றிய தேசிய கலந்துரையாடலினையும் உருவாக்குகின்றது.

## உலகம் முழுவதிலும் இருந்து நேர்மைத்திறன் விருது



### நேபாளம் - 2014 ஆம் ஆண்டு வெற்றியாளர்-கயான் மணி (கல்வி அதிகாரி)

நேபாளத்தின் பன்ச்தாரின் கிழக்கு மாவட்டத்தில் 2012 இல் கயான் மணி ஒரு கல்வி அதிகாரியாக வந்தபோது பாடசாலை ஆசிரியர்களில் 90% ஆனோர் அந்த மாவட்டத்தின் பாடசாலை களுக்கு வருவதில்லை. அந்த சந்தர்ப்பத்திலே 14 வயதளவிலான பாடசாலை மாணவர்களுக்கு எழுதவோ வாசிக்கவோ முடியாத ஒரு நிலைமை காணப்பட்டது. ஒரு அரசாங்க அதிகாரி என்கின்ற ரீதியில் ஆசிரியர்களுக்கெதிராக இவர் பாரதூரமான மற்றும் துணிகரமான நடவடிக்கைகளை எடுத்தார். பாடசாலைகளுக்கு வராத ஆசிரியர்களை இவர் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தியதுடன் இலஞ்சம் வாங்கும் ஆசிரியர்களையும் இவர் கடமையிலிருந்து இடை நிறுத்தினார். தமது ஆசிரியர்களைப் பற்றி தம்மிடம் முறைப்பாடு செய்வதற்காக தனது தொலைபேசி இலக்கத்தினை இவர் பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் வெளியிட்டார். பன்ச்தார் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களில் அதிகமானோரின் வருகை 2 வருடங்களினுள் 90% இனால் அதிகரித்து அடிப்படை மட்டத்திலே மாணவர்கள் சித்தியடையும் வீதம் 14% இலிருந்து 60% ஆக அதிகரித்தது. 2014 ஆம் ஆண்டிலே இப்பிராந்தியத்திலே கல்வி மறுசீரமைப்பிற்காக இவர் காட்டிய கடப்பாட்டிற்காகவே நேர்மைத்திறன் விருதினை இவர் வெற்றிகொண்டார். இந்த அங்கீகாரத்துடன் நேபாளத்தின் தேசிய கல்வி அமைச்சு உபாயமார்க்கத்திற்காக இவரின் மதியுரையினைப் பெற்றுக்கொள்ள ஆரம்பித்தது. அண்மையிலே சிறந்த அடிப்படைக் கல்வி முறைமைக்காக ஐரோப்பா அவற்றின் நாடுகளில் இவரின் மதியுரைக்காக இவரை அழைத்திருந்தது.

INTEGRITY IDOL NEPAL



# நைஜீரியா - 2017 ஆம் ஆண்டு வெற்றியாளர்-Dr. Nuzo Eziechi (முகாமைத்துவ உத்தியோகத்தர்)

INTEGRITY IDOL™ NIGERIA

நைஜீரியாவிலே 2017 ஆம் ஆண்டிலே ஒன்லைன் மூலமாகவும் குறுஞ்செய்திகள் மூலமாகவும் அனுப்பப்பட்ட 11,000 வாக்குகளில் இருந்து 150 ற்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கு மத்தியில் இவர் நேர்மைத்திறன் விருதிற்காகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் அர்ப்பணிப்புடன் பிரஜைகளுக்குச் சேவையாற்றி, நேர்மையுடன் தமது கடமைகளை மேற்கொண்டமை வேலைத்தளத்திலும் சமுதாயத்திலும் இவருக்குக் கௌரவத்தையும் மரியாதையையும் பெற்றுக்கொடுத்தது. இவர் அரச தொழில் முயற்சிப் பணியகத்தில் கடமையாற்றுகின்றார்.

இவர் கூறுகின்றார் “எனது பெற்றோர் எனக்குக் கற்பித்த விழுமியங்களின் அடிப்படையில் நான் வாழ்கின்றேன், என்னுடைய சொந்த விதிகளைப் பயன்படுத்தக் கூடாது அல்லது நான் செய்கின்ற எதிலும் குறுக்குப்பாதைகளைத் தெரிவு செய்யக் கூடாது. நாம் அனைவருமே நேர்மைத்திறன் விருதினை உடையவர்களாக மாறி சரியான விடயங்களைச் செய்ய வேண்டும். யார் நம்மை அவதானிக்காத போதிலும் நாம் அவற்றைச் செய்யவேண்டும். நேர்மை எங்கெல்லாம் இருக்கின்றதோ நாம் அங்கெல்லாம் உதவி செய்து நைஜீரியாவின் அடுத்த தலைமுறையினருக்கு முன்மாதிரிகளாக இருக்க வேண்டும்.”

“நேர்மை என்பது பின்விளைவுகளுக்கு முகம் கொடுப்பதாகும்.” என இவர் கூறுகின்றார். எவ்வாறு ஒரு பெண்ணாக இதை எதிர்கொண்டார் என்பதை விளக்கினார். நேர்மைத்திறன் என்பது நேர்மையாக இருப்பது மாத்திரமல்ல. மேலும் எது சரியானதோ அதற்காக எழுந்து நிற்பதுமாகும். என்னுடைய பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரையாளர் இருந்தார். என்னுடைய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன் நான் அவருடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டார். ஆனால் அது தவறானது என எனக்குத் தெரிந்தது. அவர் எனது தரங்களையே குழப்பும் அளவுக்கு சென்று அதனை 2:2 ஆக ஆக்கினார். ஆனால் அந்தப் பின்விளைவுகளுடன் நான் வாழ்ந்தேன். என்றுமே நேர்மைக்காக எழுந்திருப்பது பின்விளைவுகளுடன் சேர்ந்தே வருகின்றது.



# பாகிஸ்தான் - 2017 வெற்றியாளர் Saqib Zafar (Bahawalpur பிரிவின் ஆணையாளர்)

INTEGRITY IDOL™ PAKISTAN

ளுயஙபைடி பாகிஸ்தானின் நிர்வாகச் சேவையைச் சேர்ந்தவராவர். இவர் நிர்வாகச் சேவையின் 25வது தொகுதியிலிருந்து வருகின்றார். நேர்மைத்திறனும் தொழில் நேர்த்தியும் இவரது சேவைக்காலம் முழுவதும் இவரது பண்புகளாக இருந்துள்ளன. நேர்மைத்திறன் ஒருபோதுமே நிதி மூலங்களின் மூலம் அளக்கப்படக்கூடாது. ஆனால் தொழில் நெறிகள் மற்றும் தொழில்வாண்மைக் கடப்பாடு ஆகியவற்றின் மூலம் அளக்கப்பட வேண்டுமென இவர் நம்புகின்றார். தற்பொழுது இவர் பஞ்சாப் மாநிலத்தில் டீயாயறயடிரச இலே ஆணையாளராகக் கடமையாற்றுகின்றார். 2017 ஆம் ஆண்டிலே பாகிஸ்தானிலே நேர்மைத்திறன் விருதிற்காக இவருக்கு வாக்களிக்கப்பட்டது.

திருப்தி என்பது முதலில் மக்களுக்குச் சேவையாற்றுவதிலிருந்தும் மேலும் ஒவ்வொரு மனிதருக்குமான மரியாதையை செலுத்துவதிலிருந்தும் வருகின்றது என இவர் கூறுகின்றார். மேலும் இவர் கூறுகையில் நான் இந்தப் பரிசினை மிகவும் மதிக்கின்றேன் ஏனெனில் இது பாகிஸ்தான் மக்களிடம் இருந்து எனக்கு கிடைத்துள்ளது. இந்த நாட்டின் இளம் தலைமுறையினருக்கு நான் வழங்கும் செய்தி அவர்கள் சிவில் சேவையிலே இணைந்து நேர்மையுடன் பணியாற்ற வேண்டும் என்பதாகும். அப்போது தான் நீங்கள் கௌரவத்தினை வெற்றி கொள்வீர்கள்.

# 03. தகைமை

அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களுடனான அவர்களது ஈடுபாட்டின் போது நேர்மைத்திறனினை வெளிக்காட்டுபவர்களாக இருக்க வேண்டுமென்பதுடன் அவர்கள் தமது சேவைகளை வழங்குவதில் தமது சக்திக்கு அப்பாற்பட்டு செயற்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதுவே போட்டிக்கான தகைமைகள் ஆகும். போட்டியில் பங்குபற்றுபவர்களது நடத்தை உன்னதமான பண்புகளைக் கொண்டவதாகவும் மெச்சத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இவர்களின் நடத்தையானது மற்றவர்களையும் கவரக்கூடியதாகவும் தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். உள்ளூர் மட்ட அதிகாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஓய்வு பெற்ற உத்தியோத்தர்கள் தகைமையுடையவர்களாக ஆக மாட்டார்கள்.

## விண்ணப்பதாரி,

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- அரசாங்கத்திலோ, முகவர் நிறுவனத்திலோ அல்லது திணைக்களமொன்றிலோ ஓய்வு பெறுவதற்கு ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலத்தை உடையவராக இருக்க வேண்டும்.
- நேர்மைத்திறன் விருதுக்காக விண்ணப்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலே அரசாங்கப் பதவியில் குறைந்தது 5 வருடம் பணியாற்றி இருக்க வேண்டும்.
- அரசாங்க உத்தியோகத்தராக ∴ சிவில் சேவை உத்தியோகத்தராக தனது கடமை களையும் பொறுப்புக்களையும் நேர்மையுடன் நிறைவேற்றியவராக இருக்க வேண்டும்.
- குற்றச்செயல்கள், ஊழல் மற்றும் எவ்வகையிலுமான அதிகார துஸ்பிரயோகம் ஆகியவை தொடர்பாக குற்றம் சாட்டப்படாதவராகவும் எந்தவொரு ஒழுங்குபடுத்தல் அமைப்பினாலும் பதவியிலிருந்து நீக்கப்படாதவராகவும் இருக்க வேண்டும்.
- பிரச்சாரம் மற்றும் பகிரங்க வாக்கெடுப்புச் செயன்முறையில் பங்குபற்றத் தயாரானவராக இருக்க வேண்டுமென்பதுடன் நீதிபதிகள் குழாம் மற்றும் பொதுமக்களின் தீர்மானத்திற்கு இயைபுறுபவராக இருக்கவேண்டும்.
- உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களில் வெளியிடப்படுவதற்காக புகைப்படம் எடுப்பதற்கும் காணொளி எடுப்பதற்கும் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.

## இலங்கையில் அரசாங்க உத்தியோகத்தர்கள்

இலங்கை நாட்டினை சேர்ந்த ஏதேனுமொரு அரசாங்க ஊழியராக இருக்கலாம். ஆனால் அதிகாரசபை,அரச திணைக்கள சபை,அரச கூட்டுத்தாபனங்களை அல்லது பாதுகாப்பு சேவை மையத்தை சேர்ந்த ஒரு நிரந்தர ஊழியராக இருக்க முடியாது.

## நேர்மைத்திறன் என்பது என்ன?

நேர்மைத்திறன் என்பது அடிப்படையில் ஊழலின்மையை விளக்கப்படுத்துகின்றது. அதனை விரிவாக விளக்கும் போது தனது கடமையை தவிர்த்து மேலதிகமான சேவைகளை மக்களுக்கு வழங்குபவராகவும் அதே சமயம் நேர்மையாகவும் வலுவான கோட்பாடுகளை கடைபிடிப்பவராகவும் உள்ள ஒரு நபரை அடையாளம் கண்டுகொள்ளும் ஒரு விடயம் ஆகும்.

# 04. தெரிவடிப்படை

நியமனமானது பின்வரும் தெரிவடிப்படைகள் பூர்த்தி செய்யப்படுவதை வெளிப்படுத்த வேண்டும்.

- பொறுப்பேற்கப்பட்டுள்ள முன்னெடுப்புக்களின் தாக்கத்தின் முக்கியத்துவம்
- பின்வருவனவற்றிற்கு நீட்சி அடைகின்ற தனிப்பட்ட மட்டத்திற்கு அப்பால் எடுக்கக்கூடிய இந்த முயற்சி ∴ செயற்பாடு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் அளவு

    - நிறுவனம்
    - உள்ளூர் மட்டம்
    - தேசிய மட்டம்
    - சர்வதேசப் மட்டம்

- இவ்வாறான தகைமைகளை கொண்டிருப்பவரினால் உறுதியானதும் கடினமானதும் என அவர் நினைக்கக்கூடிய உறுதியான சவால்களை அவர் எந்தளவிற்கு வெற்றி கொண்டுள்ளார்.
- சாதகமான பெறுபேற்றினை அடைவதற்கு மேற்கொண்ட தனிப்பட்ட, பொருளாதார, பௌதீக, சமூக, தொழில் ரீதியான அல்லது நிறுவன ரீதியான தியாகங்களின் அளவு
- அரசாங்க சேவையில் முன்னெடுப்புகளை ஒரு ஒப்பீட்டு நியமக்குறியாகப் பயன்படுத்துவ தற்கான ஆற்றல்.
- பொறுப்பேற்கப்பட்டுள்ள முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதற்காக பதவி வழங்கியுள்ள வாய்ப்பினை அவர் ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்துகின்ற மட்டம்.
- நியமிக்கப்படுபவர் நேர்மைத் திறனுக்காகவே நியமிக்கப்படுகின்றார் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். உதாரணமாக சமுதாயத்தில் வெறுமனே தனது பணியை ஆற்றுவதற்காக அல்ல.

# 05. நேர்மைத்திறன் விருது 2018 செயன்முறை

| | |
|---|---|
| **2018 மே** | நடுவர் குழாமினை நியமித்தல் |
| **2018 ஜூன் / ஜூலை** | நேர்மைத்திறன் விருது நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்<br>அச்சு, இலத்திரனியல் மற்றும் ஒன்லைன் ஊடகம் மூலமாக வேட்புமனுக்களைக் கோருதல்<br>வேட்பு மனுக்களைத் தரம் பிரித்து, பொருத்தமற்ற நியமனங்களைப் புறக்கணித்தல் |
| **2018 ஜூலை** | தொண்டர்களினால் மிகவும் பரந்தளவில் பின்புலங்கள் பரிசீலிக்கப்பட்டு, வழங்கப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையினைப் பரிசீலித்தல் |
| **2018 ஆகஸ்ட்** | நடுவர் குழாமினால் பரீட்சிக்கப்பட்ட நியமனங்களை மதிப்பிட்டு இறுதி 5 வேட்பாளர்களினைத் தெரிவு செய்தல் |
| **2018 ஆகஸ்ட் / செப்டெம்பர்** | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களை பற்றிய காணொளிகளை தயாரித்தலும் வெளியிடுதலும். |
| **2018 செப்டெம்பர்** | பகிரங்க வாக்கெடுப்பு |
| **2018 ஒக்டோபர்** | விருது வழங்கும் வைபவம் |

தெரிவுச் செயன்முறை பற்றிய விரிவான விபரிப்புப் பிற்சேர்க்கை (B) வழங்கப்பட்டுள்ளது.

# 06. நியமனங்கள்

யாரும் ஒரு வேட்பாளராக நியமிக்கப்படலாம் (மாதிரி நியமனப் படிவத்திற்கு பின்னிணைப்பு A யினைப் பார்க்கவும்). நியமனப்படிவம் பின்வரும் ஊடகங்களில் இருந்து சேகரிக்கப்படலாம்.

- இணையத்தளம் [www.integrityidol.lk]
- மின்னஞ்சல் [idol@tisrilanka.org]
- கையினால் எழுதப்பட்ட மற்றும் அச்சிடப்பட்ட பத்திரங்களை 5/1 எலிபேங்க் வீதி, கொழும்பு 05 இலுள்ள நிறுவனத்தில் நேரடியாகக் கையளிக்கலாம். அல்லது இந்த முகவரிக்குத் தபாலில் அனுப்பலாம்.

நியமன விண்ணப்பப்படிவம் தொடர்பாகவும் செயன்முறை தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் தயவுசெய்து எமது தொலைபேசி இலக்கத்தினைத் தொடர்பு கொள்ளவும். 0711295295 / 0761173344.

# 07. நீதிபதிகள் குழாம்

நடுவர் குழாமில் நேர்மைத்திறனினை வெளிக்காட்டிய, சமூகத்திலே அங்கீகாரத்தினைப் பெற்ற, மிகவும் சிறப்பான 5 பேர் TISL இனால் நியமிக்கப்படுவார்கள். மேலும் இவர்களே விண்ணப்பங்களை மதிப்பிடுவார்கள். மேலும் தெரிவுச்செயன்முறையில் நடுவர் குழாம் நேர்மைத்திறனுக்கான உயர் தராதரத்தினைப் பேணி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பர்.

- வேட்புமனுக்களை அழைப்பதற்கு முன்னால் வழிகாட்டல்கள் மற்றும் செயல்விதிகளை மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வு செய்தல்
- தனிநலன் சார்ந்த முரண்பாடுகள் ஏற்படும் பொழுது குறிப்பிட்ட நியமனத்திற்கு வாக்களிப்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுதல்.
- குறிப்பிட்ட நியமனத்திற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டவரிடம் மேலதிக தகவல்களை வழங்குமாறு கோருதல்.
- தேவையேற்படின் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுதல்
- வழங்கப்பட்ட தகவல்கள் போதாதவையாக இருக்கும்போது அதை நியமனத்திற்காக பரிசீலிக்க மறுத்தல்
- தேவையேற்படின் வழங்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையினைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அல்லது அவர் வாழும் இடத்திற்கு விஜயம் செய்தலும் தேவைக்கேற்ப மேலதிக தகவல்களின் சான்றினைப் பெற்றுக் கொள்ளுதலும்
- தெரிவு செய்யப்பட்ட இறுதியான 5 பேரின் பெயர்களை வெளியிடுதல் அல்லது வெளிக்கூறுதல்
- நியமனங்கள் தேவைப்பட்ட தராதரங்களுக்கு அமைய இல்லாமல் இருக்கும் பொழுது இறுதி 5 பேரையும் தெரிவுசெய்வதிலிருந்தும் தவிர்ந்து இருத்தல்.
- தேவைப்படுத்தப்படின் நிகழ்ச்சித்திட்டத்தின் நேர்மைத்திறனினைப் பாதுகாப்பதற்கான பரிந்துரையையும் TISL ஐயும் வாபஸ் பெறுதல்.
- நடுவர் குழாமின் முடிவுவே இறுதியானதாகும்.

# 08. பகிரங்க வாக்கெடுப்பு

பகிரங்க வாக்கெடுப்பு ஊடகத்தில் நேர்மைத்திறன் விருது காணொளி வெளியிடப்பட்டதும் ஆரம்பிக்கப்படும . வாக்காளர்களுக்கு ஒரு சிம் அட்டையிலிருந்து ஒரு வாக்கினையே அனுப்ப முடியும். இது மோசடிக்கான சாத்தியத்தினைக் குறைப்பதற்கு செய்யப்படுகிறது. வாக்காளர் மோசடி என ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டு அதிலே நியமிக்கப்பட்டவர் ஈடுபட்டிருந்தால் அவர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்.

# 09. விருது வழங்கும் வைபவம்

விருது வழங்கல் வைபவம் 2018 ஒக்டோபர் மாதத்தில் நடைபெறும்.

டிரான்ஸ்பெரன்சி இன்டெர்னஷனல் ஸ்ரீ லங்கா (TISL) மற்றும் வகைப்பொறுப்புக் கூடத்தின் தலைவர் களினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகள் கலந்துகொள்ளும் வைபவத்தில் வெற்றி பெற்றவருக்கு வழங்கப்படும். முயற்சிகள் மற்றும் அடைவுகள் பற்றிய விழிப்புணர்வினைத் தேசிய ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் உருவாக்குவதற்காக விசேட பத்திரிகை உள்ளடக்கமும் பிரசித்தமும் வழங்கப்படும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட விருது மீளப்பெறப்படும்.

- கடந்த காலத்திலே விருதுக்காகத் தகைமை பெற்ற ஒருவர் அவ்வாறு தகைமை பெறுவதற்கு உண்மைகளை மறைத்துள்ளார் எனக் கண்டறியப்படும் பட்சத்தில்
- கடந்த காலத்தில் வெற்றிபெற்ற ஒருவர் நேர்மைத்திறன் விழுமியங்களுக்கு இயைபுற வில்லை மேலும் எனத் தெரியவரும் போது

வாபஸ் பெறுவது தொடர்பான விடயத்திற்குத் தேவையான சகல தேவைகளையும் நடுவர் குழாம் திரட்டி அவ்வாறான தீர்மானத்திற்கு வருவதற்கு முன் குறிப்பிட்ட வெற்றிபெற்றவரிடம் விசாரணை நடாத்தும். இவ்வாறான சகல சந்தர்ப்பங்களிலும் முன்னைய விருதினை வாபஸ் பெறுவதைப் பரிசீலிப்பதற்குத் தேவையேற்படும் பொழுது வுஜளுடு இன் நிறைவேற்று பணிப்பாளர் அதற்கான வேண்டுகோளினை நடுவர் குழாமிற்கு விடுத்து நடுவர் குழாமிற்கு அந்த வேண்டுகோளிற்கான போதிய காரணங்கள் வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் இதனை ஏற்றுக்கொண்டு முடிவிற்காகச் செயன்முறையினை மேற்கொள்வதற்கான அல்லது வாபஸ் பெறுவதற்கான வேண்டுகோளினை நிராகரிப்பதற்கான இறுதி அதிகாரத்தினை நடுவர் குழாம் கொண்டுள்ளது.

## பின்னிணைப்பு 'A' - மாதிரி நியமனப் படிவம்

நியமனப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கேடு : 2018 ஜூலை 31 அல்லது அதற்கு முன்பு
**பரிந்துரைக்கப்படும் நபர்கள் பற்றிய தகவல்கள் (தயவு செய்து கவனமாக வாசித்து தேவைப்படும் சகல தகவல்களையும் பூர்த்தி செய்யவும்)**

பெயர் : ..................................................... பிறந்த திகதி : ...............

வயது ............... பால்நிலை: ...............

தொலைபேசி / மொபைல்: ..................................................... மின்னஞ்சல்: .....................................................

நிரந்தர முகவரி: .....................................................

தற்போதைய அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி : .....................................................

பதவி : ..........................................

தொடர்பு இலக்கம் : .....................................................

அரசாங்க சேவையில் இணைந்த திகதி : .....................................................

ஓய்வு பெறுவதற்கு எஞ்சியுள்ள வருடங்கள்: .....................................................

**2018 ஆம் ஆண்டிற்கான நேர்மைத்திறன் விருதிற்காக .................................(நபரின் பெயர்) என்பவரை வேட்பாளராக நியமனம் செய்வதற்கான காரணம் (உங்களது பரிந்துரைக்கான தெளிவான காரணங்களை வழங்கவும், உங்களுக்கு எழுதப்படுவதற்கு அதிக இடம் தேவைப்படின் மேலதிக பக்கங்களை சேர்க்கவும்.)**

1.........................................................................................................................

2.........................................................................................................................

3.........................................................................................................................

பரிந்துரைக்கப்பட்ட நபரின் பதவிக்காலத்தில் வழங்கப்பட்ட கணிசமான / மிகமுக்கியமான பங்களிப்புக்கள்

1.........................................................................................................................

2.........................................................................................................................

3.........................................................................................................................

**பரிந்துரைப்பவரின் விபரங்கள் (பரிந்துரைக்கப்படும் நபர் வித்தியாசமாக இருப்பின்)**

பெயர் : .................................................. பதவி : ..................................................

பரிந்துரைக்கப்படுவருடனான உறவுநிலை: ..................................................

தொழில் : .................................................. தொலைபேசி / மொபைல் : ..................................................

மின்னஞ்சல் ..................................................

நாடு (பரிந்துரைப்பவர் நாட்டிற்கு வெளியே இருப்பின்): ..................................................

**நீங்கள் வழங்கிய தகவல்கைளப் பரிசீலிப்பதற்கும் மேலும் மேலதிக தகவல்களுக்காகவும் தயவு செய்து தொடர்புகளைக் கீழே வழங்கவும்.**

சகபாடி : பெயர் : .................................................. தொடர்பு இல: ..................................................

தலைமை அலுவலகம் : பெயர்: ............................. தொடர்பு இல: ..................................................

ஏனையோர் : பெயர்: .................................................. தொடர்பு இல: ..................................................

மேலே வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானவையாகும். மேலும் இவை பிழையெனக் காணப்படும் பட்சத்தில் பரிந்துரைக்கப்பட்டவர் 2018க்கான நேர்மைத்திறன் விருதிற்குத் தகைமை பெறுவதிலிருந்தும் அகற்றப்படுவார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................................
ஒப்பம்

## பிற்சேர்க்கை 'B' - தெரிவுக்கட்டச் செயன்முறை

**கட்டம் 1- நியமனங்கள்**
சகல நியமனத் தரவுகளும் நஓஉநட தரவுத்தளத்திலே பதியப்பட்டு இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட ஒன்லைன் நியமனங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**கட்டம் 2- செல்லுபடியாகக்கூடியதாக்குதல்**
பொருத்தமற்ற சகல நியமனப் படிவங்களும் முதன்மை திரையிடலில் நிராகரிக்கப்படும்.

**கட்டம் 3 - நியாயப்படுத்தல்**
மிகுதி நியமனங்கள் பணியாளர் / தொண்டர்களினால் மீளாய்வு செய்யப்படுதல் - நியமனத்திற்கான தெளிவான நியாயப்படுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

**கட்டம் 4 - பூர்வாங்க விசாரணை**
பொருத்தமுடைய வேட்பாளர்கள் மீளாய்வுச் செயன்முறையின் முதலாவது கட்டத்திற்கு உட்படுவர். அணிகளும் தொண்டர்களும் நியமிக்கப்பட்டவர்களை களப்பயணங்கள் மூலமாகவும் தொலைபேசியின் மூலமாகவும் தொடர்புகொண்டு நியமித்தவருடன் தொடர்புகொண்டு பின்புலத் தகவல்களைப் பரிசீலிப்பர்.

**கட்டம் 5- மீளாய்வு**
எஞ்சியுள்ள வேட்பாளர்களுக்காகப் பின்வரும் நபர்களுடன் நேர்காணல்களை நிகழ்த்துதல்: வேட்பாளர், நெருக்கமான மேற்பார்வையாளர் மற்றும் சேவையினை நாடுவோர்.

**கட்டம் 6 - தீர்மானித்தல்**
நடுவர் குழாம் ஏற்பாட்டு குழுவினால் தெரிவு செய்யப்படுகின்றது. நடுவர்கள் பக்கச்சார்பற்றவர்களாக, புறவயமானவர்களாக, குறிப்பிட்ட நாட்டில் நன்கு மதிக்கப்படுபவர்களாக இருப்பது அவசியமானதாகும். நடுவர்களில் பின்வருவோர் உள்ளடங்குவர். முன்னாள், மரியாதைக்குரிய, ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவின் தலைவர், பிரபலமான நேர்மைத் திறனுடைய நீதிபதி, நேர்மைக்காகப் பெரிதும் அறியப்பட்ட சிவில் சமூக சட்டத்தரணி. நடுவர்களின் குழாம் மூன்று முதல் ஐந்து நபர்களைக் கொண்டிருக்கலாம் (தீர்மானங்களின் பெரும்பான்மையினை உறுதிப்படுத்துவதற்காக ஒற்றை இலக்கங்கள்).

அணியானது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் பற்றிய பின்புலத்தினை நடுவர் குழாமுடன் பகிர்ந்து கொள்கின்றது. இதிலே நியமிக்கப்படுபவர்களின் பின்புலம், வாழ்க்கைப்பாங்கு மற்றும் நேர்காணல் குறிப்புகள் உள்ளடங்கும். நடுவர் குழாத்திற்க்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீள் பரிசோதனை செய்வதோடு தேவைப்படுமிடத்தில் நிராகரிக்கக்கப்பட்டதற்கான காரணங்களை அறிவதற்காக விசாரனை செய்ய முடியும். அதன்பின்னர் நடுவர்கள் வாக்களிப்பை மேற்கொள்வர். ஒவ்வொரு நடுவரினதும் வாக்கும் சமமானதாகக் கருதப்படும்.

**கட்டம் 7- உறுதிப்படுத்துதல்**

தகவல்களை உண்மைப்படுத்துவதற்காகவும் அவர்களின் நேர்மைத்திறனையும் பண்புகளையும் உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் பிரச்சாரத்திலே பங்குபற்றுபற்றுவதற்கான அவர்களின் ஆர்வத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் அணியானது அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட நியமனதாரர்களையும் சந்திக்கும். மேலும் நியமிக்கப்பட்டவரின் தற்போதைய மற்றும் முன்னாள் ஊழியர்களுடன் மேலதிக உசாவல் பரிசீலிப்புகளையும் மேற்கொள்ளும்.

முதல் ஐந்து பரிந்துரைக்கப்பட்டவர்களில் எவராவது ஒருவர் பங்குபற்ற முடியாவிட்டால் அல்லது ஏதாவது காரணத்திற்காக நீக்கப்பட்டால் ஆறாவது தெரிவு மேலே கொண்டுவரப்படும். இது ஐந்து நியமனங்கள் உறுதிப்படுத்தப்படும் வரையில் மேற்கொள்ளப்படும்.

இறுதியான ஐந்து பரிந்துரைக்கப்பட்டவர்களும் பின்வருவனவற்றுக்குத் தயாராக இருக்கவேண்டும்: வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை அல்லது ஒன்லைன் தளங்களுடனான நேர்காணல், நேர்மைத்திறன் விருதுடன் தொடர்புடைய புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட கதைகளை பகிர்தல். மற்றும் விருது வழங்கும் வைபவத்தில் பங்குபற்றுவதற்கு உள்நாட்டிலே பயணம் செய்தல் என்பவற்றிட்கு தயாராக இருக்க வேண்டும்.

## இணைப்பு ‘C’ - இணக்கக் கடிதம்

யாருக்கு : ..........................................................
டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் இலங்கை

யாரிடமிருந்து : வேட்பாளர்(கள்) (பெயர்கள் / விலாசங்கள்)

திகதி : ........................................................

இணக்கக் கடிதம்

1. டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெ'னல் இலங்கையினால் (TISL) ஏற்பாடு செய்யப்படும் நேர்மைத்திறன் விருது 2018ற்காக நான் நியமனம் செய்யப்பட்டிருப்பதை எனக்கு அறிவிக்கப்பட்டதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

2. அவ்வாறான நியமனத்திற்கான இணக்கத்தினை நான் வழங்குகின்றேன்.

3. நான் நேர்மைத்திறன் விருதிற்காகத் தெரிவு செய்யப்படுவோரின் முதல் சுற்றிலே உள்ளடக்கப்படும் போது என்னுடைய நியமனத்தினைப் பகிரங்கப்படுத்துவதற்கு நான் (TISL) க்கு அதிகாரம் அளிக்கின்றேன்.

4. என்னுடைய நியமனத்திற்கான தகுதியினை ஆய்வு செய்வதற்குத் தனிப்பட்ட ஆய்வினை நடத்த நான் வுஐளுடு க்கு அனுமதி அளிக்கின்றேன்.

5. சகல நியமனங்களும் வுஐளுடு இற்கு உரித்தானது என்பதையும் மேலும் நியமனம் ஒன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் நியமிக்கப்படுபவரின் குரல் மற்றும் படங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையினை வுஐளுடு பெற்றுக்கொள்கின்றதென்பதையும் இதனை நட்டஈடு அல்லாமல் நேர்மைத்திறன் விருது நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நேர்மைத்திறன் விருது வைபவம் ஆகியவை தொடர்பாக எந்தவொரு மொழியிலும் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ விளம்பரம் செய்வதற்கும் பிரசித்தப்படுத்துவதற்கும் உள்ள (TISL) இன் உரிமையினையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

6. ஒரு வேட்பாளர் என்கின்ற ரீதியில் என்னுடைய அறிவிற்கு அப்பால் மேலும் எனது எழுத்து மூலமான இணக்கமின்றி என்னுடைய தனிப்பட்ட தகவல்களினைச் சேகரிப் பதற்கோ அல்லது களஞ்சியப்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நான் (வுஐளுடு) க்கு அதிகாரம் அளிக்கவில்லை. நடுவர் குழாமினால் நியமனத்தினை மதிப்பீடு செய்யும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே என்னுடைய தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதற்கு நான் (TISL) க்கு அதிகாரம் அளிக்கின்றேன்.

7. நான் நேர்மைத்திறன் வாக்குறுதியினை எடுப்பதற்கும் நேர்மைத்திறன் உயர் விழுமியங்களைச் சகல சந்தர்ப்பங்களிலும் பற்றிப்பிடிக்கவும் விரும்புகின்றேன்.

உங்கள் உண்மையுள்ள,
ஒப்பம் : ....................................
பெயர் : ....................................
திகதி: ....................................

## பிற்சேர்க்கை 'D' - நேர்மைத்திறன் வாக்குறுதி

.......................................................................... ஆகிய நான், எமது எதிர்கால சந்ததியினருக்கு நேர்மைத்திறன் உடையதொரு சீரிய தேசத்தினை வழங்கும் உயரிய நோக்கத்திற்காக எனது தனிப்பட்ட, தொழில்ரீதியான மற்றும் தொழில்சார்ந்த வாழ்க்கையில் வகைப்பொறுப்பு, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை ஆகியவை தொடர்பான ஆழமான உணர்வுடன் இந்த நாட்டில் கௌரவமும் ஊழலும் அற்ற பிரஜையாக வாழ்வதற்கும் சேவையாற்றுவதற்கும் திடசங்கற்பம் பூணுகின்றேன் என்பதையும் மனித முன்னேற்றம் மற்றும் தேசிய முன்னேற்றத்திற்குத் தடைகளை ஏற்படுத்தும் சக்திகளினால் பாதிக்கப்படாமல் ஜனநாயக விழுமியங்களையும் மனித உரிமைகளையும் கடமைகளையும் பற்றிப்பிடிப்பதிலே நான் ஒரு முன்னோடியாக என்னை அர்ப்பணிப்பேன் என்றும் உறுதி பகிர்கின்றேன்.

(விண்ணப்பதாரர்)

ஒப்பம் :

திகதி :

## இணைப்பு 'E' - நியமிப்பவருக்கான வாக்குறுதி

இலங்கைப் பிரஜை என்கின்ற ரீதியில் நேர்மைத்திறன் விழுமியங்களை மதித்து நான் பின்வருவனவற்றிற்கான எனது வாக்குறுதியினை இத்தால் மொழிகின்றேன்.

- நியமிக்கப்படுபவர் நேர்மைத்திறன் விருதுக் கையேட்டிலே வழங்கப்பட்டுள்ள தெரிவடிப்படைகளைப் பூர்த்தி செய்கின்றார். மேலும் அவர் சட்டத்திற்குக் கீழ்ப்படிகின்ற, பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற, நேர்மைத்திறனினை வெளிப்படுத்துகின்ற ஒரு நபரெனவும் நான் உறுதி பகர்கின்றேன்.
- நியமிக்கப்படுபவர் அவரது கடமைகளை அரசாங்க உத்தியோகத்தர் ∴ சிவில் சேவையாளர் என்கின்ற ரீதியில் பொறுப்புக்களுடனும் நேர்மைத்திறனுடனும் நிறைவேற்றி வருகின்றார்.
- நியமிக்கப்படுபவர் எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் ஊழலுக்காகவும் குற்றம் சாட்டப்படாதவர் என்றும் அவர் அதிகாரத் துஸ்பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்றும் இலங்கையிலோ அல்லது வேறு நாட்டிலோ அவர் எந்தவொரு அரச நிறுவனங்களினாலும் நீக்கப்படவில்லையென்பதையும் நான் உறுதி அளிக்கின்றேன்.
- நான் எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் ஊழலுக்காகவும் குற்றம் சாட்டப்படாதவர் என்றும் அதிகாரத் துஸ்பிரயோகம் மேற்கொள்ளாதவர் என்றும் இலங்கையிலோ அல்லது வேறு நாட்டிலோ நான் எந்தவொரு அரச நிறுவனங்களினாலும் நீக்கப்படவில்லையென்பதையும் உறுதி அளிக்கின்றேன்.

(பரிந்துரைப்பவர்)

ஒப்பம் :

திகதி :

நேர்மைத்திறன் விருது
2018

Transparency International Sri Lanka,
5/1, Elibank Road, Colombo 05

0711 295 295 076 117 33 44

www.integrityidol.lk idol@tisrilanka.org